ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 9.1 – வங்கமா முந்நீர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9.1 – வங்கமா முந்நீர்

‡ வங்க மா முந்நீர் வரி நிறப் பெரிய ⋆
வாள் அரவின் அணை மேவி ⋆
சங்கம் ஆர் அங்கைத் தட மலர் உந்திச் ⋆
சாம மா மேனி என் தலைவன் ⋆
அங்கம் ஆறைந்து வேள்வி நால் வேதம் ⋆
அருங்கலை பயின்று ⋆
எரி மூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கம் இல் மனத்தோர் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.1** ॥

கவள மா கதத்த கரி உய்ய ⋆
பொய்கைக் கராம் கொளக் கலங்கி ⋆
உள் நினைந்து துவள மேல் வந்து தோன்றி ⋆
வன் முதலை துணி படச் சுடு படை துரந்தோன் ⋆
குவளை நீர் முளரி குமுதம் ஒண் கழுநீர் ⋆
கொய்ம் மலர் நெய்தல் ஒண் கழனி ⋆
திவளும் மாளிகை சூழ் செழு மணிப் புரிசைத் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.2** ॥

வாதை வந்தடர வானமும் நிலனும் ⋆
மலைகளும் அலை கடல் குளிப்ப ⋆
மீது கொண்டுகளும் மீன் உரு வாகி ⋆
விரி புனல் வரி அகட்டொளித்தோன் ⋆
போதலர் புன்னை மல்லிகை மௌவல் ⋆

புது விரை மது மலர் அணைந்து ⋆
சீத ஒண் தென்றல் திசை தொறும் கமழும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.3** ॥

வென்றி சேர் திண்மை விலங்கல் மா மேனி ⋆
வெள் எயிற்றொள் எரித்தறு கண் ⋆
பன்றியாய் அன்று பார் மகள் பயலை தீர்த்தவன் ⋆
பஞ்சவர் பாகன் ⋆
ஒன்றலா உருவத்துலப்பில் பல் காலத்து ⋆
உயர் கொடி ஒளி வளர் மதியம் ⋆
சென்று சேர் சென்னிச் சிகர நன் மாடத் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.4** ॥

மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய் ⋆
மூவடி நீரொடும் கொண்டு ⋆
பின்னும் ஏழ் உலகும் ஈர் அடி ஆகப் ⋆
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன் ⋆
அன்னம் மென் கமலத்தணி மலர்ப் பீடத்து ⋆
அலை புனல் இலைக் குடை நீழல் ⋆
செந்நெல் ஒண் கவரி அசைய வீற்றிருக்கும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.5** ॥

மழுவினால் அவனி அரசை மூவெழு கால் ⋆
மணி முடி பொடி படுத்து ⋆
உதிரக் குழுவு வார் புனலுள் குளித்து ⋆
வெங்கோபம் தவிர்ந்தவன் குலை மலி கதலி ⋆
குழுவும் வார் கமுகும் குரவும் நற் பலவும் ⋆
குளிர் தரு சூதம் மாதவியும் ⋆

செழுமை ஆர் பொழில்கள் தழுவும் நன் மாடத் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.6** ॥

வான் உளார் அவரை வலிமையால் நலியும் ⋆
மறி கடல் இலங்கையார் கோனை ⋆
பானு நேர் சரத்தால் பனங்கனி போலப் ⋆
பரு முடி உதிர வில் வளைத்தோன் ⋆
கான் உலா மயிலின் கணங்கள் நின்றாடக் ⋆
கண முகில் முரசம் நின்றதிர ⋆
தேன் உலா வரி வண்டின் இசை முரலும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.7** ॥

அரவு நீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை ⋆
அஞ்சிடாதே இட ⋆
அதற்குப் பெரிய மா மேனி அண்டம் ஊடுருவப் ⋆
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன் ⋆
வரையின் மா மணியும் மரதகத் திரளும் ⋆
வயிரமும் வெதிர் உதிர் முத்தும் ⋆
திரை கொணர்ந்துந்தி வயல் தொறும் குவிக்கும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.8** ॥

பன்னிய பாரம் பார் மகட்கொழியப் ⋆
பாரத மா பெரும் போரில் ⋆
மன்னர்கள் மடிய மணி நெடுந் திண் தேர் ⋆
மைத்துனர்க்குய்த்த மா மாயன் ⋆
துன்னு மாதவியும் சுர புனைப் பொழிலும் ⋆
சூழ்ந்தெழு செண்பக மலர் வாய் ⋆

தென்ன என்றளிகள் முரன்றிசை பாடும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.9** ॥

‡ கலை உலா அல்குல் காரிகை திறத்துக் ⋆
கடல் பெரும் படையொடும் சென்று ⋆
சிலையினால் இலங்கை தீ எழச் செற்ற ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானை ⋆
மலை குலா மாட மங்கையர் தலைவன் ⋆
மான வேல் கலியன் வாய் ஒலிகள் ⋆
உலவு சொல் மாலை ஒன்பதோடொன்றும் ⋆
வல்லவர்க்கில்லை நல்குரவே ॥ **9.1.10** ॥

அடிவரவு — வங்கம் கவளம் வாதை வென்றி மன்னவன் மழுவினால் வானுளார் அரவு பன்னிய கலை பொன்

வங்கமா முந்நீர் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்